Judicial Form No. 53
(see Rule 42)
Deposition of the Witness
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, UTHAMAPALAYAM.
CC No.290/2022 Date:16.07.2026
Deposition of witness for prosecution: PW1 ( LW1 )
Defence:
Court:

| | | | |
|---|---|---|---|
| Name | லோகேந்திரன் | Village | எழுவம்பட்டி |
| Father/ Husband Name | குபேந்திரன் | Taluk | உத்தமபாளையம் |
| Age | 25 /2026 | Calling | பைனான்ஸ் |

Solemnly affirmed in accordance with the provision of the Oaths Act 1969 (central Act 44 of 1969) on 16.07.2026 TIME 04.10 **AM/PM**

**எதிரி ஆஜர். வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணை :–**

நான் தற்போது எழுவம்பட்டியில் குடியிருந்து பைனான்ஸ் தொழில் செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும், எங்கள் ஊரைச்சேர்ந்தவர். சுமார் 8 வருடத்திற்கு முன்பு நான் எனது வீட்டின் முன்பாக இருந்த போது, சத்தம் கேட்டு கூட்டமாக இருந்தார்கள். அங்கே ஏற்பட்ட தள்ளுமுள்ளில் நான் கீழேவிழுந்ததில் ஊமைக்காயம் ஏற்பட்டது. நடந்த சம்பவத்தைப் பற்றி காவல் நிலையத்தில் சொல்வதற்கு சென்றபோது காவல் நிலையத்தில் என்னிடம் கையொப்பம் வாங்கினார்கள். என்னிடம் காட்டபடும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அது **அசாஆ.1** ஆகும். புகார் வாக்குமூலத்தில் எழுதியுள்ள விபரம் எனக்கு தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சி பிறழ்சாட்சியாக அனுமதி கோரி அனுமதி அளிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

கடந்த 04.09.2019 ம் தேதி மாலையில் எழுவம்பட்டியில் பிராந்தி கடை அருகே போதுமணி, முருகன், அஜித்குமார் ஆகியோர்களுக்கிடையே நடைபெற்ற வாய்தகரை அடிப்படையாக கொண்டு அன்றைய தினம் இரவு 07.50 மணியளவில் நான் எனது வீட்டில் இருந்த போது அங்கு வந்த ஆஜர் எதிரி என்னை அசிங்கமான வார்த்தைகளால் திட்டி, கீழேகிடந்த கருங்கல்லை எடுத்து என் மீது எறிந்ததில் இடது கன்னத்தில் கீழ்புறம் இரத்த காயம் ஏற்பட்டது என்றும் அருகில் இருந்த அம்சுகாளை என்பவர் விலக்கி விட முயன்ற போது எதிரி அவரை கம்பியால் உச்சந்தலையில் அடித்ததில் இரத்த காயம் ஏற்பட்டது என்றும், அருகில் இருந்தவர்கள் சண்டையை விலக்கிவிட்டார்கள் என்றும், எதிரி உன்னை கொல்லாமல் விடமாட்டோம் என்று என்னை பார்த்து கொலை மிரட்டல் செய்தார்கள் என்றும், புகார் வாக்குமூலத்திலும் போலிசார் விசாரணையிலும் சொல்லிவிட்டு தற்போது எதிரிகளுக்கு ஆதரவாக உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சாியல்ல. நான் தற்போது எதிரிகளுடன் சமரசமாகி நீதிமன்றத்தில் சமாதான மனு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான்.

சாட்சி இன்று இந்நீதிமன்றத்தில் ஆஜராகி என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் வாய்மொழியாக சாட்சியம் அளித்ததை இந்நீதிமன்றம் தட்டச்சர் மூலமாக பதிவு செய்து சாட்சி படித்து பார்த்து/விளக்கி கூறி சரியென ஒப்புக்கொண்டுகையொப்பம் செய்துள்ளார்.
Sd. P. Kamarasu
நீதித்துறை நடுவர்,
உத்தமபாளையம்.

Judicial Form No. 53
(see Rule 42)
Deposition of the Witness
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, UTHAMAPALAYAM.
CC No.290/2022 Date:16.07.2026
Deposition of witness for prosecution: PW2 ( LW2 )
Defence:
Court:

| | | | |
|---|---|---|---|
| Name | அம்சுகாளை | Village | எழுவம்பட்டி |
| Father/ Husband Name | பூச்சித்தேவர் | Taluk | உத்தமபாளையம் |
| Age | 65 /2026 | Calling | கூலி |

Solemnly affirmed in accordance with the provision of the Oaths Act 1969 (central Act 44 of 1969) on 16.07.2026 TIME 04.20 **AM/PM**

**எதிரி ஆஜர். வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணை :–**

நான் தற்போது எழுவம்பட்டியில் குடியிருந்து கூலி வேலை செய்து வருகிறேன். அ.சா.1 ஐ தெரியும், எனது உறவினர். ஆஜர் எதிரியை தெரியும், எங்கள் ஊரைச்சேர்ந்தவர். சுமார் 8 வருடத்திற்கு முன்பு நான் எனது வீட்டின் முன்பாக இருந்த போது, சத்தம் கேட்டு கூட்டமாக இருந்தார்கள். அங்கே ஏற்பட்ட தள்ளுமுள்ளில் நான் கீழேவிழுந்ததில் காயம் ஏற்பட்டது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சி பிறழ்சாட்சியாக அனுமதி கோரி அனுமதி அளிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

கடந்த 04.09.2019 ம் தேதி மாலையில் எழுவம்பட்டியில் பிராந்தி கடை அருகே போதுமணி, முருகன், அஜித்குமார் ஆகியோர்களுக்கிடையே நடைபெற்ற வாய்தகரை அடிப்படையாக கொண்டு அன்றைய தினம் இரவு 07.50 மணியளவில் அ.சா.1 அவரது வீட்டில் இருந்த போது அங்கு வந்த ஆஜர் எதிரி அ.சா.1 ஐ அசிங்கமான வார்த்தைகளால் திட்டி, கீழேகிடந்த கருங்கல்லை எடுத்து அ.சா.1 –ன் மீது எறிந்ததில் இடது கன்னத்தில் கீழ்புறம் இரத்த காயம் ஏற்பட்டது என்றும் அருகில் இருந்த நான் விலக்கி விட முயன்ற போது எதிரி என்னை கம்பியால் உச்சந்தலையில் அடித்ததில் இரத்த காயம் ஏற்பட்டது என்றும், அருகில் இருந்தவர்கள் சண்டையை விலக்கிவிட்டார்கள் என்றும், எதிரி உன்னை கொல்லாமல் விடமாட்டோம் என்று என்னை பார்த்து கொலை மிரட்டல் செய்தார்கள் என்றும், போலிசார் விசாரணையிலும் சொல்லிவிட்டு தற்போது எதிரிகளுக்கு ஆதரவாக உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சாியல்ல. நான் தற்போது எதிரிகளுடன் சமரசமாகி நீதிமன்றத்தில் சமாதான மனு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான்.

சாட்சி இன்று இந்நீதிமன்றத்தில் ஆஜராகி என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் வாய்மொழியாக சாட்சியம் அளித்ததை இந்நீதிமன்றம் தட்டச்சர் மூலமாக பதிவு செய்து சாட்சி படித்து பார்த்து/விளக்கி கூறி சரியென ஒப்புக்கொண்டுகையொப்பம் செய்துள்ளார்.

Sd. P. Kamarasu
நீதித்துறை நடுவர்,
உத்தமபாளையம்.